ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2300/33 - 2022 ඔක්තෝබර් මස 07 වැනි සිකුරාදා - 2022.10.07
*2300/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் சனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துகையில், 2022.07.22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதி விசேடமான வர்த்தமானி அறிவிப்பின் மூலம் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாதலால்;

அரசியலமைப்பின் 45 (4) ஆம் பிரிவின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சராக எனது அமைச்சின் கீழ் செயற்படக் கூடிய விடயங்கள் மற்றும் பணிகள், கீழ் தரப்பட்ட உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விரைவாக செல்லுபடியாகக் கூடிய வகையில் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சருக்கு கையளித்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரொஷான் ரணசிங்க,**
*நீர்ப்பாசன அமைச்சர்.*

*நீர்ப்பாசன அமைச்சு,*
*500, ரி. பி. ஜயா மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2022, செத்தெம்பர் 28.*


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| செயற்பாடுகள் மற்றும் பணிகள் |
|---|
| *1.0* அபிவிருத்திச் செயற்பாடுகள்<br><br>*1.1* நீர்ப்பாசன அமைச்சரினது வழிகாட்டுதலுடனும், மேற்பார்வையுடனும் கீழ் குறித்த அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.<br><br>I. வெள்ளப் பெருக்கு கட்டுப்பாட்டுத் திட்டங்களினால் வடிகாலமைப்பு மற்றும் வெள்ளப் பெருக்கினைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்<br>II. கங்கைகள், கால்வாய்கள், அருவிகள் மற்றும் குளங்கள் முதலிய நீர் ஊற்றுக்கள் சார்ந்த சூழல் மாசடைவதைத் தவிர்த்தல்<br>III. உவர் நீரை அகற்றுவதற்கான திட்டங்களைச் செயற்படுத்துதல் |
| *1.2* நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் |
| *2.0* மொத்த விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்<br>*2.1* நீர்ப்பாசன அமைச்சின் கீழான அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பிலும் நீர்ப்பாசன அமைச்சருக்கு உதவுதல். |

EOG *10 - 00035*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.